பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 05 வியாழக்கிழமை 21.07.2022 கதிர் 147



## வாவியில் மூழ்கி இருவர் மரணம்!

பேராதனை, நெல்லிகல வாவியில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் வாவியில் நீராடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யட்டகலதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 18 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

# பதவிப்பிரமாணம் செய்து அரியணை ஏறிய ரணில்

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

☞ 2

# நான் என்றுமே மக்களின் தோழன்; ராஜபக்ஷக்களின் நண்பன் அல்லன்

## வெளிநாட்டு ஊடகவியலாளரின் கேள்விக்கு ரணில் தக்க பதிலடி



**நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்லன். நான் என்றுமே மக்களின் தோழன்.**

**- இவ்வாறு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

☞ 2

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு

### சஜித் அணியிலிருந்தும் 14 பேர் நேசக்கரம் என்று ஹரின் தகவல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஐவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கக்கூடும் என்று முன்னாள் அமைச்சரான ஹரின் பெர்னாண்டோ எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அத்துடன், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 14 எம்.பிக்கள் வரை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினர் எனவும் அவர்

☞ 2

## ரணிலை வரவேற்கும் அமெரிக்கா, பிரிட்டன்




இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இன்றைய சவாலான காலங்களில், பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், ஜனநாயகம் மற்றும்

☞ 2



## 6 தமிழக மீனவர்கள் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 6 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞ 2

## ‘கோ ஹோம் ரணில்’ போராட்டம் நடத்த புதிய இடம் ஒதுக்கியுள்ளார் ஜனாதிபதி

### மனோ எம்.பி. தெரிவிப்பு



போராட்டக்காரர்கள் தமது ’கோ ஹோம் ரணில்’ போராட்டத்தைத் தடையின்றி நடத்த கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா பிரதேசம் ஒதுக்கி தரப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்சித் தலைவர்களுடன் நடத்திய விசேட சந்திப்பில் தெரிவித்தார்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

☞ 2

## டலஸின் தோல்வியையடுத்து சஜித்தின் கட்சிக்குள் மோதல்



### மயந்த இராஜிநாமா; ரணிலுடன் இணையலாம் என எதிர்பார்ப்பு

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரித்த டலஸ்அழகப்பெருமதோல்வியடைந்ததையடுத்து, சஜித் அணிக்குள் முரண்பாடு அதிகரித்து

☞ 2

## ஹெரோயினை ஊசி மூலம் எடுத்த இளைஞர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

ஹெரோயின் போதைப்பொருளை ஊசி மூலம் எடுத்துக் கொண்ட 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் .யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

நண்பர்களுடன் இணைந்து ஹெரோயின் போதை மருந்தை ஊசிமூலம்செலுத்திய இளைஞர், சிலநிமிடங்களில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளைஞரின் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பெறப்பட்ட சலம்

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரணிலை வரவேற்கும் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும், இலங்கையர்களுக்கு நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவது அவசியமாகும் என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கையின் புதிய அரசுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

அமைதியான போராட்டத்துக்கான உரிமை உட்பட ஜனநாயகமானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான ஆட்சியைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துகின்றோம் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹூல்டன் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசியக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

இதில் 8 பேர் தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் என்ற தகவலையும் அவர் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் ரணிலுக்கு ஆதரவாக 134 எம்.பிக்கள் வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'கோ ஹோம் ரணில்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம், புது ஆரம்பத்துக்காக 24 மணி நேரம் ஒத்திவைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்சித் தலைவர்களுடன் நடத்திய விசேட சந்திப்பில் எமக்குக் கூறினார்.

நாடாளுமன்றம் 24 மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டு மீள ஆரம்பிக்கப்படுவதன் மூலம் தனது அரசின் கொள்கை உரையை ஆற்ற ஜனாதிபதி விரும்புவதாக நினைக்கின்றேன்.

போராட்டக்காரர்கள் தமது 'கோ ஹோம் ரணில்' போராட்டத்தைத் தடையின்றி நடத்த கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா பிரதேசம் ஒதுக்கி தரப்படும் என்றும், தமது நல்லாட்சி காலகட்ட அசல் 19ஆவது திருத்த ஆவணம், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அரசமைப்புக்குள் கொண்டுவர விரும்புவதாகவும் ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்தார்.

மேலும், அரசையும், நாடாளுமன்றத்தையும் எம்.பிக்களைக் கொண்ட துறைசார் குழுக்களை அமைத்து நடத்த விரும்புவதாகவும் ஜனாதிபதி கூறினார் - என்றார்.

## 6 தமிழக மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி ஊடுருவிய வேளைகடற்படையினரால் ஒரு படகில் இருந்த 6 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் தலைமன்னார் கொண்டுவரப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## டலஸின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது.

அதன் வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணி தலைவர் பதவியில் இருந்து மயந்த திஸாநாயக்க இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோருக்கு இராஜிநாமாக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மயந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலில் ஊடாக நாடாளுமன்றத்துக்குப் பிரவேசித்தார்.

இதேவேளை, மயந்த திஸாநாயக்க எம்.பி., ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முழுமையாக விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஹெரோயினை ஊசி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரியில் போதைப்பொருள் நேர்மறை அறிக்கை கிடைத்துள்ளது .

இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது .

யாழ்ப்பாணத்தில் அண்மைய காலப் பகுதியில் போதைப்பொருள் பாவனையால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நான் என்றுமே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நேற்று நண்பகல் புதிய ஜனாதிபதியாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்க, மாலை கொழும்பு ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரைக்கு விஜயம் செய்தார்.

இந்தப் பயணம் தனிப்பட்ட விஜயமாகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அங்கு பிரிட்டனின் 'ஸ்கை நியூஸ்' ஊடகவியலாளர் ஒருவர், இந்நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றும், பழைய ராஜபக்ச ஆதரவாளரான நீங்கள் எப்படி அந்த மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள் என்றும் புதிய ஜனாதிபதி ரணிலிடம் கேட்டார்.

நான் எப்படி ராஜபக்சக்களின் நண்பனாக இருக்க முடியும்? எனக்குத் தெரிந்த காலத்திலிருந்தே அவர்களுக்கு எதிரானவர். இன்று வெளிநாட்டில் இருந்து வந்து ராஜபக்ஷ ஆதரவாளரா என்று என்னிடம் கேட்கின்றீர்கள் - என்று ரணில் பதிலளித்தார்.

'இலங்கை எதிர்பார்க்கும் மாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்துவது?' - என்று குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு,

இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த நான் தயாராக உள்ளேன். நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஒரு ஊடகவியலாளராக நீங்கள் ஆழ்ந்த தேடலில் ஈடுபட வேண்டும். இது போன்ற கேள்விகளைக் கேட்காதீர்கள் - என்று ரணில் பதிலளித்தார்.

'நீங்கள் ராஜபக்ஷக்களின் நண்பன் இல்லையா?' என்று மீண்டும் அந்த ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு,

நான் ராஜபக்சக்களின் நண்பன் அல்லன். நான் என்றுமே மக்களின் தோழன். இன்னொன்றையும் கூறுகின்றேன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து நான் இதற்கு முன்னர் பணியாற்றியுள்ளேன். நான் அவருக்கு வாக்களித்ததில்லை. அவர் ஒரு கட்சி, நான் இன்னொரு கட்சி. நான் ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்படுகிறேன் என்று கூறுவது நான் அவருடைய நண்பன் என்று அர்த்தமல்ல. எனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை எனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகளாக மட்டுமே பார்க்கின்றேன் - என்று ரணில் பதிலளித்தார்.

## பதவிப்பிரமாணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் ஜனாதிபதியாகச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார்.

இதற்கமைய இன்று முற்பகல் 10 மணியளவில் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இந்நாள், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஒன்பதாவது நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1949ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி பிறந்த ரணில் விக்கிரமசிங்க கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமராகப் பதவி வகித்திருந்தார்.

1970ஆம் ஆண்டு களனித் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

1977ஆம் ஆண்டில் முதன் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன் இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக அப்போது கடமையாற்றியிருந்தார்.

28 வயதில் வெளிவிவகாரப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வகித்திருந்தார்.

1989ஆம் ஆண்டு மார்ச் 06 முதல் 1993ஆம் ஆண்டு மேமாதம் 07 வரையான காலப்பகுதியில் நாடாளுமன்ற சபை முதல்வராகப் பணியாற்றியிருந்த ரணில் விக்கிரசிங்க, 1994 முதல் 2001 வரை மற்றும் 2004 முதல் 2015 வரை நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராகப் பதவி வகித்திருந்தார்.

அவர் முதன்முறையாக 1993ஆம் ஆண்டு மே மதம் 07ஆம் திகதி பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் திகதி வரை அந்தப் பதவியை வகித்திருந்தார். அவர் ஆறு தடவைகள் பிரதமராகக் கடமையாற்றியிருந்தார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பதவியை வகித்து வரும் போதே மக்களின் எதிர்ப்பை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ இம்மாதம் 14ஆம் திகதி ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

இதனைத்தொடர்ந்துஅரசமைப்புக்கு அமைய பதில் ஜனாதிபதிப் பதவிக்கு ரணில்விக்கிரமசிங்கநியமிக்கப்பட்டிருந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விளக்கம் தாருங்கள்!

ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத்தில் நடைபெற்று முடிந்து விட்டது. ரணில் விக்கிரமசிங்க பெருவெற்றியீட்டி ஜனாதிபதியும் ஆகிவிட்டார். இந்தத் தெரிவில் தமிழர் தரப்பு வரலாற்றுத் தவறிழைத்து விட்டது. அப்படி அது இழைக்கப் போகின்றது என்பதை எச்சரிக்க, எச்சரிக்க வழமை போல அந்த எச்சரிக்கையைப் புறமொதுக்கி, விதண்டாவாத விளக்கங்களைக் கூறி, வேண்டுமென்றே அழிச்சாட்டியம் பண்ணி, பிடிவாதம் பிடித்து, விடயத்தை கவிழ்த்துக் கொட்டியிருக்கிறது கூட்டமைப்பு தலைமை.

அந்த வரலாற்றுத் தவறுக்கான விளக்கம், விளைவு குறித்துக் கூட கூட்டமைப்புத் தரப்பு – பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி – மக்களுக்கு வெளிப்படையாக ஒரு அறிக்கை வெளியிடாமல், விளக்கம் தராமல், பம்மிக் கொண்டிருக்கிறது.

இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தீர்மானம் தனியாவர்த்தனமாக – தனிமனித முடிவாக – இருந்தமை போல, இந்த வரலாற்றுத் தவறு குறித்து மக்களுக்கு விளக்கம் கூறும் அறிவித்தலும் கூட தனியாவர்த்தனமாக வரக்கூடாது.

கூட்டமைப்பின் பங்குதாரர்கள் எல்லோரையும் கூட்டி வைத்து, விவாதித்து, இந்த விடயத்தில் தமது மக்களுக்குப் பதிலும் விளக்கமும் நேர்மையான முறையில் அளிப்பதன் மூலம் பொறுப்பு கூறல் கடப்பாட்டை கூட்டமைப்பு நிறைவு செய்ய வேண்டும். அதைக்கூட, எனக்கு மட்டும்தான் முதுகுத் துணிவு இருப்பதாகக் கற்பனை பண்ணி, அதன் அடிப்படையில் தனி ஆவர்த்தனம் வாசிப்பதாகக் காட்டாமல், ‘கூட்டு அமைப்பின்’ செயல்பாடாக – விளக்கமாக – அறிக்கையாக – அது வெளிவர வேண்டும்.

இது விடயத்தில் கூட்டமைப்பின் செயல்பாடும் போக்கும் முடிவும் பெரும் வரலாற்றுத் தவறு என்று மக்கள் கருதுகின்றனர். அது தொடர்பில் தமது விளக்கத்தை – உண்மை நிலவரத்தை – நியாயமான முறையில் வெளிப்படுத்த கூட்டமைப்பு முன் வர வேண்டும். திரும்பவும் அதே விதண்டாவாதமாக இருக்கக் கூடாது. தவறு இழைக்கப்பட்டிருந்தால் அதை ஒப்புக் கொள்வதன் மூலம் இலகுவாக மக்களைத் திருப்தி செய்து, அவர்கள் மனதை வெற்றிகொள்ள முடியும் என்பதையும் கூட்டமைப்புத் தலைமை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்கும் ஒரு விநயமான விண்ணப்பம். தனியாகக் கொழும்புப் பத்திரிகைகள், இரவு ஒரு தமிழ்த் தொலைக்காட்சிச் சேவையின் செய்தி அறிக்கை, சுமந்திரன் அவ்வப்போது வழங்கும் சில தகவல்களை மட்டும் பெற்றுக் கொண்டு கூட்டமைப்பை நடத்தலாம் என்று நீங்கள் கனவு கண்டால் அது கூட்டமைப்பை அழிக்கும் வேலையன்றி வேறில்லை. யதார்த்தமாகப் பேசுங்கள். யதார்த்தத்தைப் பேசுங்கள். உண்மையாகப் பேசுங்கள். உண்மையையே பேசுங்கள்.

ரணிலை நிராகரித்து, டலஸை ஆதரிக்க முடிவை கொள்கைக்காக எடுத்தீர்கள் என்றால் அந்தக் கொள்கையை சொல்லுங்கள். அது கூட விதண்டாவாதமாக இருக்கக் கூடாது. ராஜபக்ஷ குடும்பத்திற்குக் கடைசி நேரத்தில் ரணில் முதுகு கொடுத்தார், அதனால் அவரை எதிர்த்தோம், எதிர்க்கின்றோம் என்று சுமந்திரன் சொன்னால் அது கடந்த இரண்டு மாத காரியம். அதுவும் கூட ராஜபக்ஷக்களை விமர்சித்துக் கொண்டு தான், அதை ரணி செய்தார். ஆனால் அவருக்கு மாறாக கூட்டமைப்பு ஆதரித்த டலஸ் கடந்த 17 வருடங்களாக ராஜபக்ஷ குடும்பத்துக்கு முதுகு கொடுப்பவர். இன்னும் கூட – இன்றும் கூட –ராஜபக்ஷக்களை விமர்சித்து ஒரு வார்த்தை கூட கூறாதவர். அவரை ஆதரித்துக் கொண்டு, ரணிலை எதிர்க்கிறோம் என்பதற்கு சுமந்திரன் கூறுவது போன்ற விதண்டாவாதங்களை விடுத்து, தங்கள் பக்கம் ஏதேனும் நியாயமான காரணம் இருந்தால் அதை வெளிப்படுத்தக் கூட்டமைப்பு முன் வரவேண்டும்.

# கியூ.ஆர். குறியீட்டு முறையை அமுல்படுத்துவதில் சிக்கல்!

### எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கியூ. ஆர். குறியீடு முறையை அமுல்படுத்துவதால் கையடக்கத் தொலைபேசிகளை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வது பாரிய விளைவுகளை ஏற்படுத்துவதுடன், நடைமுறைச் சிக்கல் இருப்பதாகவும், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் காப்பீட்டுத் தொகை நீக்கப்படும் என காப்புறுதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

நாட்டின் சிபெட்கோ மற்றும் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்களிலும் 21 ஆம் திகதி முதல் கியூ. ஆர். குறியீடு மூலமாக எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியுமென கூறப்பட்டிருந்தது. எனினும், தற்போது காப்பீட்டுத் தொகையை பெறுவதில் சிக்கல் இருப்பதாக காப்புறுதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளமையால், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இந்த முறைமையை நடைமுறைப் படுத்துவதற்கு அச்சம் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் நடைமுறையில் அமுல்படுத்த முடியாது எனவும், அதற்கான மாற்று நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தினர் ஆலோசித்து வருகின்றனர்.

இதேவேளை, கியூ.ஆர். குறியீடு மற்றும் வாகனப் பதிவு இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் மூலமான எரிபொருள் வழங்கும் திகதி காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் பதுக்கல்; 997 பேர் கைதாகினர்!

### பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மீட்பு

நாட்டில் பல்வேறு பகுதிகளில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருந்தமை, அதனை களஞ்சியப்படுத்தியமை மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்தமை தொடர்பில் 997 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களிடமிருந்து 33 ஆயிரத்து 847, லீற்றர் பெற்றோல் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 634 டீசல், 19 ஆயிரத்து 214 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஏப்ரல் 11ஆம் திகதி முதல் ஜுலை 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விசேட சுற்றிவளைப்புகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றிவளைப்புகளின் போது சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருந்தமை, அதனை களஞ்சியப்படுத்தியமை மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்தமை தொடர்பில் 1,077 சுற்றிவளைப்புகளின் 997 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினர் எரிபொருள் பெற்றுத்தரக்கோரி மகஜர்!

குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினர் எரிபொருள் பெற்றுத்தரக்கோரி யாழ்.மாவட்ட செயலாளரிடம் மகஜரை கையளித்தனர். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக கடற்றொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரைப் பெற்ற மாவட்ட செயலாளர் எதிர்வரும் நாள்களில் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# சிறுவர், முதியோர் இல்லங்களுக்கு திருமலையில் உலருணவு வழங்கல்




(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் விசேட தேவையுடையோர் தங்கியுள்ள நிலையங்களுக்கு தேவையான ஒரு தொகை உலர் உணவுப்பொருள்களை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். அரசாங்க அதிபர் அந்தந்த இடங்களுக்கு நேரடியாக சென்று உலர் உணவுகளை வழங்கியமையுடன் சிநேகபூர்வமாகவும் கலந்துரையாடினார்.

9 அனாதை இல்லங்கள், 3 முதியோர் இல்லங்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கான பராமரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கு இந்த உலர் உணவுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் மற்றும் உரிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வியாழக்கிழமை 21.07.2022

# பிரிட்டன் பிரதமர் தேர்தலில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார் ரிஷி சுனக்



இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் சமீபத்தில் தனது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான தேர்தலை ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி நடத்தி வருகிறது. பிரதமர் பதவிக்கான போட்டியில் 8 வேட்பாளர்கள் களம் இறங்கியதால் 2 இறுதி வேட்பாளரை தேர்வு செய்ய கன்சர்வேட்டிவ் எம்.பிக்கள் பல்வேறு கட்டங்களாக வாக்களித்து வருகின்றனர். கடந்த வாரம் நடந்த 3 சுற்று தேர்தல்களில் 4 வேட்பாளர்கள் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டு, 4வேட்பாளர்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

இந்த 2 சுற்று தேர்தல்களிலும் இந்திய வம்சாவளியை சேர்ந்த முன்னாள் நிதி மந்திரி ரிஷி சுனக் முதல் இடத்தை பிடித்து முன்னிலை வகித்தார். இதற்கிடையே, நேற்று முன்தினம் 4வது சுற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. இதிலும் ரிஷி சுனக் முதலிடம் பிடித்தார். மொத்தமுள்ள 358 கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பிக்களில் 115 பேர் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர். அவருக்கு அடுத்தபடியாக வர்த்தக மந்திரியாக இருக்கும் பென்னி மோர்டன்ட்டுக்கு 82 வாக்குகள் கிடைத்தன. வெளியுறவுத்துறை செயலாளர் லிஸ் டிரஸ்சுக்கு 71 வாக்குகள் கிடைத்தன. இதன்மூலம் பிரதமர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 4ஆக குறைந்துள்ளது. 120 வாக்குகள் பெறுபவரே கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் பொறுப்பேற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், ஐந்தாவது சுற்று தேர்தல் இன்று நடைபெற்றது. இதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் 137 பேர் ஆதரவு பெற்றார். லிஸ் டிரஸ் 113 பேரின் ஆதரவு பெற்றார். வர்த்தக மந்திரியாக இருக்கும் பென்னி மோர்டன்ட்டுக்கு 105 வாக்குகள் கிடைத்தன. இதன்மூலம் இறுதிக்கட்ட பிரதமர் வேட்பாளர்களாக ரிஷி சுனக் மற்றும் லிஸ் டிரஸ் ஆகியோர் களத்தில் உள்ளனர். ரிஷி சுனக் மற்றும் லிஸ் டிரஸ் இருவரும் திங்கட்கிழமை நடக்கவுள்ள டிவி விவாதத்தில் பங்கேற்க உள்ளனர்.

# வான் பாதுகாப்பு அமைப்புக்களை அமெரிக்காவிடம் உக்ரைன் கோரல்

## உக்ரைன் அதிபரின் மனைவி வேண்டுகோள்



உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் மனைவி ஒலனா ஜெலன்ஸ்கா இன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் எம்.பிக்களிடையே உரையாற்றினார். அப்போது, அவர் பேசியதாவது:- எதிரிகளை எதிர்த்து போராடவும் லட்சக்கணக்கான உக்ரைன் மக்களை பாதுகாக்கவும் அமெரிக்கா எங்களுக்கு ஏற்கனவே நிறைய உதவி செய்துள்ளது. இந்த போராட்டத்தில் அமெரிக்கா எங்களுடன் நிற்பதற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம். ரஷ்யா கொல்லும் போது, அமெரிக்கா காப்பாற்றுகிறது.

அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். துரதிர்ஷ்டவசமாக போர் முடிவுக்கு வரவில்லை. பயங்கரவாதம் தொடர்கிறது. இந்த போரில் கொல்லப்பட்டவர்கள் சார்பாகவும், கை கால்களை இழந்தவர்கள் சார்பாகவும், இன்னும் உயிருடன் இருப்பவர்கள் சார்பாகவும், போர் நடைபெறும் முன்களப் பகுதியில் இருந்து தங்கள் குடும்பத்தினர் திரும்ப வருவார்கள் என்ற நம்பிக்கையில் காத்திருப்பவர்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கிறேன். நான் கேட்க விரும்பாத ஒன்றைக் கேட்கிறேன், ஆயுதங்களைக் கேட்கிறேன். ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளை கேட்கிறேன். என் மகன் தனது பள்ளிக்குத் திரும்ப முடியுமா என்பது, உக்ரைனில் உள்ள லட்சக்கணக்கான தாய்மார்களைப் போன்று எனக்கும் தெரியாது. எனது மகள் கல்வியாண்டின் தொடக்கத்தில் பல்கலைக்கழகத்திற்குச் சென்று சாதாரண மாணவ பருவ வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? என்பதற்கும் என்னிடம் பதில் இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.

# எலான் மஸ்க் மீது தொடர்ந்த வழக்கு ஒக்ரோபர் மாதம் விசாரணைக்கு




உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் சமூகவலைதளமான டுவிட்டரை வாங்க முடிவு செய்தார். இதையடுத்து 44 பில்லியன் டொலர்களுக்கு டுவிட்டரை எலான் மஸ்கிடம் விற்க டுவிட்டர் நிர்வாகம் கடந்த ஏப்ரல் மாதம் ஒப்பந்தம் செய்தது. இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு டுவிட்டர் நிறுவன பங்குகளை எலான் மஸ்கிற்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வந்தன. இதற்கிடையே, டுவிட்டரில் உள்ள போலி கணக்குகள், பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள கணக்குகள் உள்பட சில விவரங்களை தரும்படி டுவிட்டர் நிர்வாக குழுவிடம் எலான் மஸ்க் கோரிக்கை விடுத்தார். ஆனால், 2 மாதமாகியும் எலான் மஸ்க் கேட்ட விவரங்களை தர டுவிட்டர் நிறுவனம் மறுத்து வந்தது.

இதனால் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுகிறேன் என எலான் மஸ்க் கடந்த 9ம் திகதி அதிரடியாக அறிவித்தார். போலி கணக்குகள் தொடர்பாக கேட்ட தகவல்களை டுவிட்டர் நிறுவனம் தராததாலும், ஒப்பந்தப்படி செயல்படாததாலும் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுகிறேன் என எலான் மஸ்க் அறிவித்தார்.

டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட சம்பவம் உலக அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதையடுத்து, டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட நிலையில் அவர்மீது டுவிட்டர் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை எலான் மஸ்க் கட்டாயம் நிறைவு செய்யவேண்டுமென டுவிட்டர் நிறுவனம் வழக்கு தொடர்ந்துள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு டெல்லவிர் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் விசாரிக் குமாறு எலான் மஸ்க் தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், இந்த வழக்கு விசாரணை வரும் ஒக்ரோபர் மாதம் முதல் தொடங்கும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

# மீண்டும் வருகிறார் ஜஸ்டின் பீபரின் பாப்



பிரபல பாப் இசை பாடகர் ஜஸ்டின் பீபர் (வயது 28). ஜஸ்டிஸ் உலக சுற்றுலா என்ற பெயரில் பல்வேறு உலக நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாப் இசை கச்சேரிகளை நடத்தி வருபவர். உலகம் முழுவதும் இவருக்கு கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். கடந்த ஜூனில் இவருக்கு பக்கவாதம் ஏற்பட்ட விடயம் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதனால், டொரண்டோவில் நடைபெற இருந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்கு முன் ரசிகர்களுக்கு அவர் வீடியோ ஒன்றை வெளியிட்டார்.

அதில் அவர், ஜஸ்டிஸ் உலக சுற்றுலாவானது நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. தனக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என தெரிவித்து உள்ளார். அவருக்கு ராம்சே ஹன்ட் சிண்ட்ரோம் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என கூறப்படுகிறது. இதனால், ஒரு காதின் பக்கத்தில் உள்ள முக நரம்பு பாதிக்கப்படும். இதனால், முகம் முடக்குவாதம் ஏற்படுவதுடன் கேட்கும் திறனையும் இழக்க கூடிய ஆபத்து உள்ளது. அந்த வீடியோவில் அவர், மிக முக்கியம். இந்த வீடியோவை காணுங்கள். ரசிகர்களாகிய உங்களை நான் விரும்புகிறேன். உங்களுடைய பிரார்த்தனையில் எனக்கும் இடம் கொடுங்கள் என தலைப்பிட்டார். அவர் அதில் கூறும்போது, இந்த கண் துடிப்பு இல்லாமல் உள்ளது. இதனை நீங்கள் காணலாம். எனது முகத்தின் ஒரு பக்கத்தில் என்னால் புன்னகைக்க முடியவில்லை. மூக்கு துவாரம் ஒரு பக்கம் அசைக்க முடியவில்லை. முகத்தின் ஒரு பக்கம் முழு அளவில் முடங்கி போயுள்ளது. முக முடக்குவாதம் ஏற்பட்டு உள்ளது.

அதனால், அடுத்த எனது நிகழ்ச்சிகளை நான் ரத்து செய்து விட்டதற்காக பெருத்த ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு, என்னால் உடல்ரீதியாக, செயல்பட முடியவில்லை என வெளிப்படையாக தெரிவித்து கொள்கிறேன். இது சற்று தீவிரம் வாய்ந்தது. நீங்கள் அதனை காணலாம் என்று கூறியுள்ளார். அவர் தொடர்ந்து பேசும்போது, முகத்திற்கு வேண்டிய பயிற்சிகள் அளித்து வருகிறேன். ஓய்வு எடுத்து கொள்கிறேன். நான் என்ன சாதிக்க வேண்டும் என பிறந்தேனோ அதற்காக தயாராகி 100 சதவீதம் முழுமையாக திரும்பி வருவேன் என தெரிவித்து உள்ளார். எனினும், அவர் முழுமையாக குணமடைந்து எப்போது திரும்பி வருவார் என்பதற்கான காலஅளவு எதனையும் தெரிவிக்கவில்லை. கொரோனா பெருந்தொற்று பரவலின்போது கடந்த 2 முறை அவரது சுற்றுப்பயணம் தள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில், 3வது முறையாக இந்த சுற்றுப்பயணமும் தள்ளி வைக்கப்பட்டது ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியது. 24 கோடி பேர் தொடரும் அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியான இந்த வீடியோவை, 37 லட்சத்திற்கும் கூடுதலானோர் பார்த்து வேதனை அடைந்தனர். 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அவருக்கு ஆறுதல் தெரிவித்து பதிவுகளை வெளியிட்டனர். இந்த சூழலில், ஜஸ்டின் பீபர் ரசிகர்களை மீண்டும் மகிழ்விக்க வருகிறார். அவர் உலக சுற்றுலாவில் ஈடுபட உள்ளார். இதில் விரைவில் இந்தியாவுக்கும் வந்து பாப் இசை கச்சேரிகளை நடத்த இருக்கிறார். இதன்படி, இந்தியாவுக்கு வருகிற ஒக்ரோபர் 18ம்திகதி வருகிறார். புதுடெல்லி ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் அவர் இசை கச்சேரியை நடத்துகிறார். இதற்கான டிக்கெட்டுகள் விற்பனை தற்போது தொடங்கியுள்ளது. ரூ.4 ஆயிரத்தில் இருந்து டிக்கெட் விலை தொடங்குகிறது. ஜஸ்டினுக்கு முக முடக்குவாதம் ஏற்பட்ட அதே வாரத்தில், அவரது மனைவி ஹெய்லி பீபர் கூறும்போது, ஒவ்வொரு நாளும் தனது கணவர் நன்றாக குணமடைந்து வருகிறார். இது அரிதான மற்றும் அதிக அச்சமூட்டும் விசயம் ஆகவும் இருந்தது என அவர் கூறினார். இதன்பின்பு கடந்த ஜூனில் இருவரும் சர்ச்சுக்கு ஒன்றாக செல்வது, நடப்பு ஜூலையில் சுற்றுலா செல்வது என பல இடங்களுக்கு சென்று வந்துள்ளனர். ஜஸ்டின் பீபர் முக முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டபோது, வடக்கு அமெரிக்காவில் நடைபெற இருந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் ரத்து செய்தது ரசிகர்களை வருத்தமடைய செய்தது. அவர் மீண்டும் புத்தெழுச்சி பெற்று பாப் இசை பாடல்களை பாட இருப்பது அவரது ரசிகர்களுக்கு புது உற்சாகம் ஏற்படுத்தி உள்ளது.

# மீனவர்கள் 6 பேர் கைதுக்கு டாக்டர் ராமதாஸ் கண்டனம்



எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என 6 ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளமைக்கு பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், வங்கக்கடலில் கோடியக்கரைக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன் பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிங்களக் கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கடந்த 3 வாரங்களில் இது நான்காவது முறையாகும். இவர்களையும் சேர்த்து மொத்தம் 29 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்களப் படையினரின் இந்தத் தொடர் அத்துமீறலை இந்தியா இனியும் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. கைது செய்யப்பட்ட மீனவர்களில் இதுவரை விடுதலை செய்யப்பட்ட 12 பேர் தவிர மீதமுள்ள மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

## புதுச்சேரியில் விரைவில் புதிய கல்விக்கொள்கை அமுல் துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் உறுதி



புதுச்சேரியில் அரசுப் பள்ளிகளில் கல்வியில் தரத்தை உயர்த்தவும், டிஜிற்றல் வகுப்பறை அமைத்து நவீனமாக்க தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும் என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்திருக்கிறார்.

புதிய கல்விக் கொள்கையில் எந்த மொழியையும் திணிக்க வழியில்லை. மொழி சொல்லித் தருவதை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளலாம். தாய்மொழி கல்வியைதான் புதிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தியுள்ளார்கள். தாய்மொழியில் பேசினாலும், தாய்மொழியில் எவ்வளவு பேர் கற்கிறார்கள்? தாய்மொழி கல்வி பின்வரிசையில்தான் உள்ளது. ஆங்கில வழிக்கல்வியைதான் பெருமையாக பேசுகிறார்கள். நோபல் பரிசு வென்ற பலரும் தாய் மொழியில் கற்றவர்கள்தான். அதனால்தான் தாய் மொழிக்குதான் முக்கியத்துவம் தருகிறோம். குழந்தைகளின் கிரகிப்பு தன்மை மேம்படும். வேறுமொழிக்கோ, திணிப்பு மொழிக்கோ புதிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் தரவில்லை. புதிய கல்விக் கொள்கையை முழுவதுமாக படியுங்கள். திடீரென்று கொண்டு வரவில்லை. பல நன்மைகள் இருக்கிறது. இடைநிற்றல் இருக்காது. குழந்தைகளை வகுப்பறை தாண்டி உலக அரங்கில் உயர்ந்தவர்களாக மாற்றவேதான் இம்முறை அமுலாகிறது, என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய கல்விக் கொள்கை புதுச்சேரியில் நிச்சயமாக அமுல்படுத்தப்படும். முதலிலேயே எதிர்மறையாக சிந்திக்காமல் நேர்மறையாக சிந்திப்போம். வருங்காலம் சவாலான காலம். உலகரங்கில் போட்டியிட வேண்டும். சவால்களை சந்திக்கக் குழந்தைகளைத் தயார் செய்யவே புதிய கல்விக் கொள்கை, என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.



## தங்கமணி வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை சிக்கிய சொத்து ஆவணங்கள் சரிபார்ப்பு

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் வருவாய்த் துறை அமைச்சராகவும் தொழில் துறை அமைச்சராகவும் பின்னர் மின்சாரத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர் தங்கமணி. இவர் தற்போது குமாரபாளையம் தொகுதி எம்.எல்.ஏயாக உள்ளார்.

முன்னாள் அமைச்சர் தங்கமணி, அவரது மனைவி சாந்தி, மகன் தரணிதரன் ஆகிய மூவர் மீதும் சொத்துக்குவிப்பு வழக்குப்பதிவு செய்து நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் விசாரித்து வரும் நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு சொந்தமான சென்னை அருகே பனையூரில் உள்ள பங்களா மற்றும் அவரது உறவினர்கள், நண்பர்கள், அவரது கணக்காய்வாளர்களுக்கு சொந்தமான 69 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் 2.38 கோடி ரூபா ரொக்கம், 1.130 கிலோ தங்கம், 40 கிலோ வெள்ளி, கணக்கில் வராத, 2.16 கோடி ரூபா, மொபைல் போன்கள், பல வங்கிகளின் 'லொக்கர்' சாவிகள் மற்றும் சொத்து ஆவணங்களை கைப்பற்றியதாகதகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், கோவிந்தபாளையத்தில் உள்ள தங்கமணி வீட்டில் அவரது சொத்து ஆவணங்களை வருவாய்த்துறை, பொதுப் பணித்துறை, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சுமார் நேற்று பரிசோதித்தனர் என செய்தி வெளியாகியுள்ளது. அவரது வீட்டையும் வீட்டில் உள்ள பொருள்கள், அதற்கான ஆவணங்கள் குறித்தும் மதிப்பீடு செய்துள்ளதாகவும், முன்னர் மேற் கொண்ட சோதனையின்போது சிக்கிய சொத்து ஆவணங்கள் குறித்தும் மதிப்பீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணல் இன்று



இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் வருகிற 24 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. எனவே புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை தேர்தல் கமிஷன் வெளியிட்டது. இதில் மத்தியில் ஆளும் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக ஒடிசாவை சேர்ந்த பிரபல பழங்குடியின தலைவரும், ஜார்கண்ட் மாநில முன்னாள் கவர்னருமான திரவுபதி முர்மு களமிறக்கப்பட்டார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸை சேர்ந்தவருமான யஷ்வந்த் சின்கா போட்டியிட்டார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 18 ஆம் திகதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இந்த வாக்குகள் அனைத்தும் எண்ணும் பணியானது இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த வாக்கு எண்ணிக்கையை, தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநிலங்களவை செயலாளருமான பி.சி.மோடி மேற்பார்வையிடுகிறார்.

இந்தியாவின் 15 ஆவது ஜனாதிபதி யார்? என்ற விவரம் இன்று இரவுக்குள் வெளியாகும் என இந்தியத் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## மாநிலங்களவை எம்.பியாக உஷா பதவிப் பிரமாணம்



இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் 12 பேர் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு மாநிலங்களவை நியமன உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுவருகிறது.

அதன் அடிப்படையில் தற்போது மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக இசையமைப்பாளர் இளையராஜா, தடகள வீராங்கனை பி.டி.உஷா உள்ளிட்டோரை இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்தார்.

அதையடுத்து, நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் தடகள வீராங்கனை பி.டி. உஷா ராஜ்ய சபாவில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை நாளை இந்து கலாச்சார முறைப்படி திறக்கப்படும்

## கழுகுமலை பத்து பாடி யாத்திரை அங்கு ஆரம்பம்

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நாளை வெள்ளிக்கிழமை கழுகுமலை பத்து பாடி திறந்து வைக்கப்பட இருக்கின்றது.

கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாகக் காட்டுப் பாதை திறக்கப்படவில்லை.

எனவே, இம் முறை காட்டுப்பாதையூடாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை காலை 6 மணிக்கு உகந்தைமலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்குவார். காலை 7 மணியளவில் காட்டுப் பாதை திறக்கப்படும். அவ்சமயம், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என். டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரசாங்கஅதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க, காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட பல அன்பர்கள் கலந்து கொள்வார்கள்.

நாளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜினால் கழுகுமலை பத்து பாடி காட்டுப் பாதை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

முதல் நாளிலேயே சுமார் இரண்டாயிரம் பாதயாத்திரீகர்கள் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அடி யார்கள் கலந்து கொள்வார்கள். கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் வாகூரவட்டை. பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. அதிலிருந்து 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம். மொத்தமாக காட்டுப் பாதை 56 மைல்களை உள்ளடக்கியது. சுமார் 6 நாள்கள் இந்த பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

நாளை திறக்கப்படும் கட்டுப்பாதை ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி மூடப்படுகிறது. கதிர்காம கொடியேற்றம் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும்.

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம் என ஷேத்திராடனம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

# குமுக்கனிலிருந்து குடிதண்ணீர் வழங்கல் கதிர்காம பாத யாத்திரை செல்வோருக்கு!

## நாவலடியில் தினமும் அன்னதானம்





(காரைதீவு நிருபர் சகா)

நாளைவெள்ளிக்கிழமைதிறக்கப்படவிருக்கும் கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும்அடியார்களுக்கு, குமுக்கனிலிருந்து வியாழை வரைக்குமான 11 மைல் தூர பிரதேசத்தில் சீரான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள தம்பிலுவில் சிவதொண்டர் அமைப்பு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அமைப்பின் ஆலோசகர் முத்துலிங்கம் கருணாநிதி இது குறித்துத் தெரிவிக்கையில் –

வழமையாகஆறுபவுசர்கள்நீர்த்தாங்கிளுடன் இந்த பணியை மேற்கொள்வோம். இம்முறை 8 பவுசர்கள் நீர் தாங்கிகளோடு இந்த பணி மேற்கொள்ளப்படவிருக்கின்றது .

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை மற் றும் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளோடு இந்த நீர் குமுக்கன் ஆற்றில் எடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு அடியார்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவிருக்கிறது. – என்றார்.

இதேவேளை, தம்பிலுவில் சிவ தொண்டர் நிலையம் அதன் தலைவர் எஸ். கேதீஸ்வரன் தலைமையிலே நாவலடி என்கின்ற இடத்தில் 25ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக பகலில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றது. மட்டக்களப்பு மாநகர சபையினரும் அங்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாவலடியிலிருந்து கதிர்காமம் வரைக்கும் செல்லும் யாத்திரிகர்களின் நலன் கருதி அவர்களுக்கான அரிசி மற்றும் மரக்கறிகளை வழங்கவும் ஏற்பாடு செய்திருப்பதாக சிவ தொண்டர் அமைப்பின் ஆலோசகர் கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

கிழக்கின் தென் எல்லையில் உள்ள குமுக்கன் ஆற்றில் ஐந்தடி அளவில் தண்ணீர் செல்வதால் ஆற்றை கடப்பதற்கு குழந்தைகள், முதியவர்கள் ஆகியோருக்குஉதவி செய்யவும் அமைப்பு ஏற்பாடு செய்திருக்கின்றது .மலையகப் பகுதியில் பெய்த மழை காரணமாக குமுக்கன் ஆற்றில் 5 அடி நீர் பாய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தையும் ஊவா மாகாணத்தையும் பிரிப்பது இந்த குமுக்கன் ஆறு என்பது குறிப்பிடத்தக்கது.




# தம்பலகாமம் பத்தினிபுரம் கிராமத்தில் பயறு, கௌபி செய்கை ஊக்குவிப்பு

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் பத்தினிபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான பயறு செய்கை மற்றும் கௌபி வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம் பெற்றது.

விரைவான உணவு உற்பத்தி எனும் திட்டத்தின் கீழ் இடம் பெற்ற இந் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயிகளுக்கான கௌபி விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு உணவு விவசாய தாபனம் ஊடாக நடை முறைப்படுத்தப்படவுள்ள பயறு செய்கை ஊக்குவிப்புக்கான விழிப்புணர்வும் இடம் பெற்றது. பயிர்ச் செய்கை தொடர்பான தெளிவுபடுத்தல்களை விவசாய போதனாசிரியர் அஸ்ஹர் கலந்து கொண்டு தெளிவுபடுத்தினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வீ.தங்கரூபன் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ‘காவல் படை’ வழக்கில் யாழ். முதல்வர் விடுவிப்பு





யாழ்.மாநகர சபையால் உருவாக்கப்பட்ட ‘காவல் படை’ தொடர்பிலான வழக்கில் இருந்து, யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், காவல் படையின் சீருடைகளையும் மீளக் கையளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில், யாழ்.மாநகர சபையினரால் காவல் படை உருவாக்கப்பட்டது.

யாழ். மாநகர சுகாதாரத்தை மேம்படுத்துதல், குப்பைகளை பொது இடங்களில் வீசுபவர்கள், பொது இடங்களில் துப்புபவர்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக தண்டம் விதித்தல், தேவைப்படின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவே காவல் படை உருவாக்கப்பட்டது.

குறித்த காவல் படையின் சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது என பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முன்னதாக காவல் படையை சேர்ந்தவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்த பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் , தொடர்ந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபனிடமும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு யாழ்.மாநகர சபைமுதல்வர்சட்டத்தரணிவி.மணிவண்ணனை அழைத்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், முதல்வரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா அழைத்து சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள், முதல்வரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, நீதிமன்றால் முதல்வர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் மேற்படி வழக்கு நேற்று (புதன்கிழமை) எடுத்துக்கொள்ளப்பட்ட போது , வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் மன்றுக்கு அறிவித்தமையை அடுத்து யாழ். மாநகர முதல்வரை வழக்கில் இருந்து மன்று விடுவித்து விடுதலை செய்ததுடன் , சான்றுப் பொருள்களாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த காவல் படையின் சீருடைகளையும் மாநகர சபையிடம் ஒப்படைக்க மன்று உத்தரவிட்டது. யாழ்.மாநகர சபைக்கு உற்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட காவல் படையை புலிகளின் மீள் உருவாக்கம் , புலிகளின் காவல் துறையின்சீருடையைஒத்ததுஎனபொய்க்குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் இருந்து தற்போது முதல்வர் விடுவிக்கப்பட்டதுடன், சீருடைகளையும் மீள கையளித்து உள்ளதால், காவல் படை என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற் காக மீள செயற்படும் என மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் தெரிவித்தார்.

# சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து குறித்த வழக்கு ஒத்திவைப்பு

மைனா கோ கம, கோட்டா கோ கம மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்களின் போது, கடமை தவறியதாக கூறி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் இடம்பெற்ற விசாரணை அறிக்கை சட்ட மா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.டியினர் இதுவரை செய்த விசாரணையின் அறிக்கையை இவ்வாறு சட்ட மா அதிபருக்கு கையளித்துள்ளதாக, கோட்டை நீதிவான் திலின கமகேவுக்கு நேற்று (புதன்கிழமை) அறிவித்தனர்.

மைனா கோ கம,கோட்டா கோ கம மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன் போதே சி.ஐ.டியினர் இதனை நீதிவானுக்கு அறிவித்தனர்.

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்த போது, வழக்கின் 36 ஆவது சந்தேக நபராக ஒருவரை சி.ஐ.டியினர் மன்றில் ஆஜர் செய்தனர்.

மேற்படி சந்தேக நபரே அலரி மாளிகையில் நடந்த, மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்பான கூட்டத்தை தொகுத்தளித்தார் எனவும், அவர் இறுதியில் கோட்டா கோகம, மற்றும் மைனா கோ கம நோக்கி செல்ல அங்கு திரண்டவர்களை தூண்டினார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இந் நிலையில் சந்தேக நபரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

இந் நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன் வைத்த கோரிக்கைக்கு அமைய, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் நீதிவான் திலின கமகே சி.ஐ.டியினரிடம் வினவினார்.

இதன்போதே, அவர் தொடர்பான விசாரணை அறிக்கை சட்ட மா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக சி.ஐ.டியினர் பதிலளித்தனர். இந் நிலையில் மேற்படி வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 3 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

# பணி நிறுத்த காலத்திலும் எரிபொருள் பெற பொலிஸ் சீருடையில் வந்த நபர் சிக்கினார்







(பாறுக் ஷிஹான்)

எரிபொருளை நிரப்புவதற்காக வருகை தந்த முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதியன்று மாலை அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நாளை வெள்ளிக்கிழமை(22 ஆம் திகதி) வரை சந்தேக நபரான முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர் அண்மையில் மட்டக்களப்பு பகுதியில் வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளை ஒன்றில் சந்தேக நபராக இனங்காணப்பட்ட நிலையில் பொலிஸ் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில கல்முனை பாண்டிருப்பு பகுதியை சேர்ந்த 56 வயதான இந்தச் சந்தேக நபர் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் பொலிஸ் சீருடை தரித்து வருகை தந்து பல தடவை எரிபொருளை நிரப்பிசென்றநிலையில்பொலிஸார்மேற்கொண்டவிசாரணையில் கைதாகியுள்ளார்.

இந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி மீது அரச ஊழியர் போன்று நடமாடியமை சட்டவிரோதமாக பொலிஸ் சீருடையை அணிந்து நேர்மையீனமாக செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்ட போதிலும் எவ்வாறு சீருடைகளைப் பெற்றுச் செயற்பட்டார் என்பது தொடர்பில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# மர்மமான முறையில் உயிரிழந்த வெளிநாட்டுபெண் சடலமாக மீட்பு

*காலியில் வீடொன்றில் வசித்து வந்த ஜேர்மன் பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*பொலிஸாரின் கூற்றுப்படி, உயிரிழந்தவர் 60 வயதுடையவர் எனவும் அவர் வீட்டில் தனியாக வசித்து வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*உயிரிழந்தவர் ஜேர்மனிக்கு சென்று பின்னர் தனது வீட்டில் வசிப்பதற்காக நாடு திரும்பியவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

*பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, அவர் ஜேர்மனிக்கு விஜயம் செய்து பதினைந்து நாள்களுக்கு முன்னர் தான் நாடு திரும்பியுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவிருந்தது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2022இல் வெளியிடப்பெற்றது.